Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர்கால புடைப்புச்சிற்பங்களின் அழகியல் வெளிபாடு

**ஆ.காளிமுத்து & K.இராஜேந்திரன்**
**மாமல்லபுரம் சிற்பகல்லூரி**

37

**ஆய்வுச்சுருக்கம்:**

கலைகளில் பல கலைகள் சிறப்புற்று இருந்த போதிலும், அக்கலைகளின் வழியே கடந்தகால வரலாறு, சமுக அமைப்பு, மக்களின் வழ்க்கைமுறை, கலைச்சார்ந்து நம் முன்னோர்கள் கொண்டுள்ள அறிவையும் மற்றும் திறமைகளையும் அறிந்து கொள்ளவும் ஆய்வுசெய்யவும், அக்கலைகளின் (நீடித்த தன்மை) ஸ்திரதன்மை என்பது மிக முக்கியமானதாக உள்ளது, ஏனெனில் மேற்கண்ட அனைத்து தகவல்களையும் திரட்டுவதற்கு காரணியக இருப்பது, கண்டெடுக்கபட்ட எஞ்சிய கலைப்பொருட்களின் தற்போதிய தோற்ற நிலைதான்.

இக்கலைகள் காலத்தால் இயற்கை மாற்றத்தாலும் சீற்றதாலும் சமகால சீரமைப்புகள் மற்றும் புனரமைப்புகளாலும் அழிந்து கொண்டிறிருகிறது இப்படி அழிந்து கொண்டிருக்கும் பல கலைபடைப்புகளுக்கு மத்தியில் பல்லவர்காலச்சிற்பக்கலை குறிப்பக புடைப்புச்சிற்பம் என்பது பல பகுதிகளில் இன்றளவும் தன் தோற்றத்தை இழக்காமல் நிலைத்து நிற்கிறது, அதன் காரணம் கற்சிற்பங்ளின் ஸ்திரத்தன்மையாகும். இச்சிற்பங்கள் கொண்டு நாம் அறிந்து கொள்ளும் அழகியல் வெளிப்பாடு என்ன என்பதை பற்றிய ஆய்வுக்கட்டுரை இது

**கற்சிற்பவகைகள்**

இச்கற்சிற்பங்களை அடிப்படையில் மூன்று வகைகளாக பிரிக்கலாம் அவை முப்பரிமான தனிச்சிற்பம், கூட்டு சிற்பங்கள், முப்பரிமான புடைப்புச்சிற்பங்கள்.

தனிச்சிற்பங்கள் பெரும்பாலும் நாயகன் நாயகி தெய்வங்கள் அலங்கார காட்சிப்படைப்புகள் போன்ற கலை பொருட்களாக உருவாக்கப்படுகிறது, இவ்வாறு உருவாக்கப்படும் தனிச்சிற்பங்கள் தனிநபர் பற்றியும் அவர்களை பற்றிய தனிப்பட்ட தகவல்களை மட்டுமே ஏற்று நிற்கிறது, கூட்டுசிற்பங்கள் ஒரு தனிபட்ட நிகழ்வின் காட்சியை பதிவு செய்கிறது இதற்கு மாறாக புடைப்பு சிற்பங்கள் ஒரு காட்சியையோ அல்லது ஒரு ஒன்றிற்கு மேற்ப்பட்ட நிகழ்வுகளையோ, கதையாடல்களையோ மையபடுத்தி உருவாக்கப்படுவதால் இது மற்ற இரண்டு சிற்பவகைகலை காட்டிலும் அதிக தகவல்களை கொண்டுள்ளதாக அமைகிறது

**ஆய்வுக்களம்**

பல்லவர்களால் ஆட்சி செய்யபட்ட சிற்பங்களின் கடலாக இருக்கும் மாமல்லபுரம் எனது ஆய்வுக்களம், அனைவரும் வியக்கதக்க வகையில் அங்கு அமையபெற்ற பல்லவர் கால புடைப்புச்சிற்பங்கள், நான் இவ்வாய்வு கட்டுரைக்காக எடுத்து கொண்ட கருபொருள், பல்லவர்கால புடைப்புச்சிற்பங்களான அர்சுனன் தவம் மற்றும் மகிசாசூரமர்த்தினி,

**கடவுச்சொற்கள்**

பல்லவர் கால சிற்பங்கள், புடைப்புச்சிற்பங்கள், அழகியல், கற்சிற்பம், சிற்பங்களில் கதையாடல்- உருவ சிலைகளின் கூட்டுத் தொகுப்பு.

**முன்னுரை**

அடிப்படையில் கலைகள் என்பது அழகியலோடு வெளிப்படுபவை அவைகளில் பலவகை உண்டு எனினும் இவைகள் நிலம், கலாச்சாரம், வாழ்வியல் , அரசியல் மற்றும்,மதக்கோட்பாடுகள் சார்ந்து அவைகளின் இயக்கம் அல்லது வெளிப்பாட்டின்பால் கலைகள் அதன் தன்மைகள் என அனைத்தும் வேறுபடுவதாயினும் இக்கலைகள் அனைத்திற்கும் பொதுவாக இருப்பது அழகியல் ஆகும்.

கலைகள் அழகியலை இழக்கும் பொழுது அது வெறும் காட்சிப்பொருளாகிறது, எந்த ஒரு கலைகளிலும் காணப்படும் அழகியல் என்பது வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் வெளிப்படுமாயின் அது ஒரு குவளையில் உள்ள நீர் போல தன் அழகியலை சுருக்கிக் கொள்கிறது, ஆனால் வரம்புகள் இன்றி கலைஞனின் கற்பனையோடும் சுதந்திரத்தோடும் வெளிப்படும் போது அது அழகியலின் எல்லையற்ற வெளிப்பாடாக அமைகிறது.

இக்கண்ணோட்டத்தில் பல்லவர் கால புடைப்புச் சிற்பங்களை நாம் பார்க்கும்போது வெளிப்படும் அல்லது பார்வையாளன் புரிந்து கொள்ளும் அழகியல் என்பது கலைப்படைப்பிற்க்கு அப்பால், அது ஒரு உரையாடலையும் , கதையாடலையும் நம்மிடம் உருவாக்குகிறது, இவ்வாறு அக்கலைபடைப்பின் மூலம் எழுப்பப்படும் அல்லது உந்தப்படும் கதையாடல் அந்தக் கலைப்படைப்பை சார்ந்து நமக்கு இன்னும் பல கேள்விகளை உதிக்க செய்கிறது இந்த கேள்விகள் மூலம் ஏற்கனவே நாம் அறிந்திருக்கின்ற தகவல்களைத் தாண்டி இன்னும் பல புதிய தகவல்களை நாம் அறிந்து கொள்ள ஏதுவக அமைகிறது

**இடத்தேர்வு- மகிஷாசுரமர்த்தினி புடைப்புச் சிற்பம்**

பல்லவர்களால் உருவாக்கப்பட்ட மகிஷாசுரமர்த்தினி புடைப்புச் சிற்பம் ஒரு குன்றின் மேல் அமைந்துள்ளது, மகாபலிபுரம் கலங்கரை விளக்கத்திற்கு அருகில் அமைந்துள்ள இந்த மண்டபம், ஒரு குடவரை கோயிலாக இருந்த போதிலும் அக்கோயிலின் மேல் கட்டுமான முறைப்படி ஒலக்கணேஸ்வரர் கோவில் கட்டப்பட்டுள்ளது, இக்கோவிலின் நுழைவாயிலில் நான்கு முழு தூண்களையும் இரண்டு புடைப்புச்தூண்களையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது, மண்டபத்தின் பக்கவாட்டு சுவரில் செதுக்கப்பட்ட மகிஷாசுரமர்த்தினி புடைப்பு சிற்பம் அசுரர்களை போர்க்களத்தில் வதம் செய்யும் காட்சியை பதிவு செய்யும் விதமாக உள்ளது. இம்மண்டபம் கலங்கரை விளக்கம் அமையப்பெற்ற குன்றிற்கு பின்னால் அமைக்கப்பட்டுள்ளதால் மற்ற குடவரை கோயில்களை காட்டிலும் அது அமையப்பெற்ற இடத்தின் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை

**இடத்தேர்வு- அர்ஜுனன் தவம் அல்லது பகிரதன் தவம்**

அர்ஜுனன் தவம் அல்லது பகிரத தவம் என அறியப்படுகின்ற புடைப்புச்சிற்பம் மாமல்லபுரதில் அமைந்துள்ளது, மேலும் இது கடற்கரையை நோக்கி கிழக்கு முகம் பார்த்து அமையப்பட்ட மிகப்பெரிய கூட்டுப் புடைப்புச் சிற்பக் காட்சி ஆகும், மேலும் மகிஷாசுரமர்த்தினி மண்டபம் அமைந்திருக்கும் இடத்தில் இருந்து இச்சிற்பம் சற்று முன்னோக்கி கடற்கரை கோயிலுக்கு அடுத்த கலை படைப்பாக அமைக்கப்பட்டுள்ளது பண்டைய காலத்தில் இந்த ஊர் துறைமுக நகரமாக

இருந்திருக்கும் என ''மகாபலிபுரத்து ஜைன சிற்பம் எனும் நூலில் ஆசிரியர் திரு மயிலை சினி வேங்கிடசாமி பதிவு செய்துள்ளார்'' அவரின் கூற்றுப்படி பார்த்தால் துறைமுக நகரம் என்பது வணிகர்கள் வந்து செல்லும் இடமாகும் அவ்வாறு அயல் நாட்டினர் வரும்போது நம் நாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் இவைகளை விளக்கவும் அந்த நகரத்தை அழகியல்படுத்தவும் அங்கு கலைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம். அப்படி உருவாக்கப்பட்ட இந்த நகரம் அன்றைய காலகட்டதில் ஒரு திறந்தவெளி கலை காட்சி கூடமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை

**உருவத்தொகுப்பில் அழகியல்- மகிஷாசுரமர்த்தினி**

மகிஷாசுரமர்த்தினி புடைப்பு சிற்பத்தின் காட்சிப்பகுதியை பிரித்த விதம் அப்போர்க்காட்சியில் இரு தரப்பிற்கும் சரியான காட்சி சமநிலையை அளிக்க அவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது எனினும் மகிஷாசூரனின் போர்படை வீரர்கள் அமையப்பட்ட விதம் தெளிவானதாகவும் காண்போருக்கு காட்சிமுறன் ஏதும் இல்லாமலும் அமைக்கப்பட்டுள்ளது, காரணம் குறைவான படைவீரர்கள் சரியான முறையில் பிறிக்கபட்ட நேர்மறை மற்றும் எதிர்மறை இடைவெளிகளை கையாண்டவிதம்

அதற்கு மறுபுறம் மர்தினி சிங்கத்தின் மேல் அமர்ந்து போர் செய்வது போல் உள்ளது மேலும் அவருடன் போர் புரியும் வீரர்களின் அமைப்பு சற்று காட்சி நெருடல்களை உண்டாக்குவதாக உள்ளது, காரணம் சிங்கத்தின் பாய்ச்சல் அம்மையின் போர் புரியும் பல ஆயுதங்கள் ஏந்திய கைகள் என்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ளதால் சக போர் வீரர்களின் உருவங்கள் அமைப்பதற்கு போதுமான இடம் இல்லாமல் இருக்கின்றது இந்த இடப்பற்றாக்குறை உருவங்களை நெருங்கச்செய்து காட்சிகளை காண்போறுக்கு இறுக்கமான ஒரு உணர்வை அளிக்கின்றது இது பார்வையாளர்களுக்கு காட்சி ஓய்வு என்பது இல்லாமல் செய்கிறது, இதுவே அந்தப் புடைப்புச்சிற்பத்திற்கு அழகியல் தடையாக உள்ளது.

**உருவத்தொகுப்பில் அழகியல்-அர்ஜுனன் தவம் அல்லது பகிரதன் தவம்**

இப்புடைப்புச் சிற்பத்தின் தொகுப்பில் பல உருவங்கள் பரவி கிடந்தாலும் அவை அதை சார்ந்த குணங்களின் தன்மைக்கு ஏற்றார் போல் இடத்தேர்வுடன் அமைக்கப்பட்டுள்ளது இச்புடைப்புசிற்பத்தின் தனிச்சிறப்பு என கூறலாம் இச்சிற்பத்தின் நடுவில் இயற்கையாக அமைந்த ஒரு பிளவு அந்தப் பிளவில் செதுக்கப்பட்ட நாகதெய்வங்களின் சிற்பங்கள் என அனைத்தும் சரியான இடத்தில் அமைத்திருப்பது கலைஞனின் கலை சார்ந்த திட்டமிடலின் திறமையை காட்டுகிறது, அந்த சிற்பத்தின் வலது புறம் கீழே யானைக் குடும்பங்கள் ஒரு நிஜ யானையின் அளவிற்கே செதுக்கப்பட்டுள்ளது அதற்கு மேலே நுட்பங்கள் நிறைந்த உருவங்கள் இவை இரண்டிற்கும் எண்ணிக்கை மாறுபாடுகள் அதிகமாக காணப்படுகிறது, இடது புறம் மேலே தேவர்கள் பாமரர்கள் பூதகணங்கள் காட்டு மிருகங்கள் என முழுமை பெற்ற உருவத் தொகுப்பாக இது விளங்குகிறது, சிற்பத்தின் அனைத்து உருவங்களுக்கும் நேர்மறை எதிர்மறை இடைவெளிகள் சீராக அமைக்கப்பட்டுள்ளதால் இச்சிற்பத்தை காண்போருக்கு காட்சி இனிமையை தருகிறது, மேலும் இந்த இடைவெளிகள் தனித்தனியே உருவங்களை ரசிப்பதற்கும் வழிவகை செய்கிறது

**கதையாடல்**

**மகிஷாசுரமர்த்தினி** இந்த புடைப்பு சிற்பம் கதையடல் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது இது ஒரு புராண கதையாக உள்ளது துர்க்கை தேவர்களை துன்புறுத்திய அசுரர்களை வதம் செய்ய சிவபெருமான் இன்னும் பிற தெய்வங்களால் உருவாக்கிய ஒரு சக்தியாக, எருமை தலை உடைய சூரனான மகிசனை வதம் செய்யும் காட்சி இது, இதைத் தவிர்த்து இந்த வதைக்காட்சியில் மகிசன் மர்த்தினியை எதிர்கொள்ள முடியாமல் பின்வாங்குவது போன்ற உடல் மொழியை பெற்றிருக்கின்றான் மகிஷனை சார்ந்த போர்வீரர்கள் மத்தினியின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் சோர்ந்தும் இறந்தும் காணப்படுகிறார்கள், இதைத் தவிர்த்து இது புராணக்கதை என்பதால் கலைஞனுக்கும் பார்வையளனுக்கும் எந்த ஒரு கதையடலையும் உரையாடலையும் இவற்றில் காண இயலாது

**அர்ஜுனன் தபசு அல்லது பகிரதன் தவம்** இச்சிற்பம் எந்த ஒரு புராண கதைக்கும் நேரடையான தொடர்பில் இல்லை அவ்வாறு தொடர்பு இருப்பதற்க்கு சான்றுகளோ ஆதாரங்களோ இன்றளவும் நிரூபிக்கப்படவில்லை இச்சிற்பத்தை மூன்று பகுதிகளாக நாம் பிரித்துக் கொள்ளலாம் முதல் அடுக்கில் இச்சிற்பம் விண்ணுலகையும் பூமியையும் இணைத்தார்போல் உள்ளது, மேலே சூரியன் சந்திர கடவுள்களையும் சிவன் உருவத்தையும் ஒற்றை காலில் நின்றபடி தவம் இருக்கும் ஒரு மனிதனையும் ஆயுதங்களை ஏந்தியபடி சூழ்ந்திருக்கும் பூதங்கணங்களையும் காணலாம் இச்சிற்பத்தில் காணப்படும் காட்சிகள் நமக்கு தனித்தனியெ பல்வேறு கதைகலை சொல்கிறது, மேலே உள்ள விண்ணுலக மனிதர்களின் சிற்பங்களை பார்க்கையில் பறவைகளின் உடல் மொழியை ஒத்த குணங்களில் காணப்படுகிறார்கள் ஆகாயத்தில் பயணம் செய்யும் பறவையானது எவ்வாறு தன் கால்களை காற்றின் ஊடே இலகுவாக வைத்து கொள்ளுமோ அதேபோன்று அந்த தேவர்களின் உடலமைப்பும் அமைக்கப்பட்டுள்ளது, யானைகளின் சிற்பக்கூட்டத்தைப் பார்க்கையில் இரண்டு பெரிய யாணைகள் யாணைக் குட்டிகள் அவைகளின் விளையாட்டு என தொடர்ந்து அதன் வாழ்வியலை கவனித்த ஒரு கலைஞனால் மட்டுமே இவ்வாறு உருவங்களை வடிக்கமுடியும் என்பதை உணர முடிகிறது,

நடுவில் அமையப்பெற்ற கங்கை நதி என உருவகப்படுத்தப்படுகிற அந்த பிளவின் கரைகளில் அன்றாடம் காணும் கட்சிகளான துறவிகளின் தவம் விலங்குகளின் கூட்டம் நதிக்கரையின் ஓரத்தில் கோயில் மண்டபம் என ஒரு இயல்பான காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது அதற்கு நேர் மாறாக மேலே சூரிய சந்திர கடவுள்களையும் தேவர்களையும் இன்னும் பிற சிற்பங்களையும் செதுக்கியிருப்பது புராண கதைகள் அதற்கு மாறாக பூமியில் நடக்கும் சாதாரண நிகழ்வுகளின் வித்தியாசம் என்ன என்பதை சுட்டிக்காட்டுவதற்க்காக இருக்கலாம் என்பது என் கூற்று.

வலது புறம் மேற்பகுதியில் காணப்படும் கின்னாரா என்கிற பறவையின் கீழ் உடலும் மனிதனின் மேல் உடலும் இணைந்தார்போல் உள்ள சிற்பம், இமயமலை(தசரத்னகிரி மலை) பகுதியில் காணப்படும் சிற்பங்களாகும், இவை இந்து மற்றும் பௌத்தம் ஆகிய புராணங்களில் சொல்லப்படும் இசை மற்றும் காதல் இரண்டிற்கும் சான்றாக சொல்லப்படும் பறவை இனங்கள் ஆகும், இதை வைத்து பார்க்கும்போது பல்லவ கலைஞர்கள் இங்கு மட்டும் இல்லாமல் பல இடங்களுக்குச் பயணித்து அங்கு காண கிடைக்கின்ற அப்பகுதியின் கலைகளை கலைத்தாக்கத்தின் அடிப்படையில் இங்கு

செதுக்கியிருப்பது இவர்களின் கலைப்பயணத்தையும் கலை ஒப்புருவையும் கலைச்சர்ந்து அவர்களீன் தேடல்களையும் விளக்கும் வகையில் உள்ளது.

கங்கை நதி என அறியப்படுகிற இயற்கை பிளவு ஒன்று இப்புடைப்புச்சிற்பத்தின் நடுவில் அமைந்திருக்கிறது, இதில் அமைந்துள்ள சிற்பங்கள் அனைத்தையும அகற்றி பார்த்தால் இயற்கையில் இது ஒரு மிகப்பெரிய இடையில் பிளவு பட்ட பாறைய தெறியும், மழைக் காலங்களில் அப்பிளவு வழியக வரும் மழைநீர் சிறிய அருவியைப் போன்றும் அதைத் தொடர்ந்து ஓடி செல்லும் நீர் ஒரு நதியை போன்றும் இருந்திருக்கும், மேலும் இந்தப் பிளவை ஆகாய கங்கை எனக் குறிப்பிடுவதால், அந்தப் பாறையின் பிளவு வழியாக மழைக்காலங்களில் வழிந்த மழை நீரை பார்த்த கலைஞர்கள் அந்தக் காட்சியை மைய்யப்படுத்தி கலைபடைப்பை வடிவமைத்து இருக்ககூடும்,அப்படிப்பட்ட ஒரு இயற்கை நிகழ்வை கண்டு அதை சார்ந்தே ஒரு கலைப் படைப்பை செய்ய தூண்டப்படுதல் என்பது ஆகச்சிறந்த கலைஞர்களுக்கு மட்டுமே சாத்தியம் என்பதை நம்மால் மறுக்க முடியாது, மேலும் அதை நதியாக பாவித்து அதை சுற்றியே மக்கள் வாழ்விடம், நாகரீகம், கலை, வாழ்வியல் என அனைத்தும் உருவாகியது என்பதை சுட்டிக் காட்டவும் இங்கு அப்படிப்பட்ட ஒரு சிற்பத்தை செதுக்கியிருக்கலாம்.

**முடிவுரை**

மகிஷாசுரமர்த்தினி மற்றும் அர்ஜுனன் தபசு அல்லது பகிரதன் தவம் இந்த இரண்டு சிற்பங்களை அழகியல் கண்ணோட்டத்தோடு அனுகிய பின் நாம் அறிந்து கொள்கிற முடிவு என்னவென்றால் மகிஷாசுரமர்த்தினி சிற்பம் புராண கதையை பின்புலமாக கொண்டு அதில் வேறு எந்த புனைவும் இல்லாமல் புராணத்தில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறதோ அதை அப்படியே செதுக்கப்பட்டுள்ளதால் அதில் எந்த ஒரு கதையாடலையும் அதன் மூலம் உருவாகும் புறஅழகியலையும் காண முடியவில்லை, அதற்கு நேர் மாறாக பகிரதன் தவம் அல்லது அர்ஜுனன் தவம் என்ற புடைப்புச்சிற்பம் புராண கதைகளுக்கான சிற்பங்களையும் கொண்டு அதேசமயம் அவை அல்லாத அன்றாட வாழ்வியலின் காட்சிகளையும் தன்னகத்தை கொண்டுள்ளது,

புராண கதைகளை விட்டுவிட்டு மற்ற காட்சிகளை நாம் அழகியல் சார்ந்து அறிவுப்பூர்வமாக அணுகும்போது நமக்கு அவை சொல்லும் கதைகள் அல்லது அவைகளில் இருந்து நாம் பெறுகிற உரையாடலின் பொருள் என்பது மிக அற்புதமானவையாக உள்ளது மேலும் இந்த இரண்டு புடைப்புச்சிற்பங்களிள் ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது, அவை யாதெனில் இயற்கையில் அனைத்தும் பாறைகள் தான் அவற்றை கலைத்து கண்டெடுக்கப்படுவது தான் சிற்பக்கலை அவ்வாறு கலைக்காக இயற்கையாக அமைந்த பாறையை நாம் திட்டமிட்ட வடிவத்திற்கு உருமாற்றுவது என்பது ஒரு முழுமையான செயற்கை தனத்தை அக்கலையில் புகுத்தி விடுகிறது, ஆனால் இருக்கிற இயற்கை தோற்றத்துடன் நமது கலையையும் ஒரு அங்கமாக பொருத்திப்பார்ப்பது என்பது இயற்கையோடு இணைந்த செயற்கையும் கலந்த அற்புதமான கலை படைப்பையும் உணர்வையும் நமக்கு அளிக்கிறது, இவ்வழியாக நாம் பார்க்கும் பொழுது மாமல்லபுரத்தில் அமையப்பெற்ற இந்த ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டு புடைப்புச் சிற்பங்களில் அர்ஜுனன் தவம் (அ) பகிரதன் தவம் புடைப்புச் சிற்பம் பல உரையாடல்களையும் கதையாடல்கலையும் எப்பொழுதும் எழுப்பிக் கொண்டே இருக்கும்

என்பதில் ஐயமில்லை

**துணைநூற்பட்டியல்**


- ''தமிழக வரலாறு' புலவர் குழந்தை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
- ''நான் கண்ட கல்வெட்டுகள்''
- தொல்லியல் ஆய்வுகள் கல்வெட்டுகள் நாணயம் பற்றியவை ஆசிரியர் டாக்டர் கே வி ராமன்
- ''தமிழ் பண்பாட்டு வரலாறு'' ரா களஞ்சியம் தொகுப்பாசிரியர் பேராசிரியர் காவியா சண்முகசுந்தரம
- ''இந்தியக் கலை வரலாறு'' டாக்டர் எம் சாலமன் பெர்னாட்ஷா பி முத்துக்குமரன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
- ''தமிழ்நாட்டு வரலாறு' ஆ ராமசாமி
- ''கல்வெட்டுகளும் தமிழ் சமூக வரலாறும்'' மா ராசாமணித்தனர் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
- ''தமிழக சிற்பங்களில் பெண் தொன்மம்'' முனைவர் நிர்மலா அலைகள் வெளியிட்டகம்
- தமிழக வரலாறு பண்பாடும் டாக்டர் கே கே பிள்ளை


**இணையமுகவரி**


- https://www.keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-apr22/43675-2022-05-04-06-23-25
- https://www.tamilvu.org/tdb/titles_cont/sculpture/html/mahishasuramardini.htm
- https://puratattva-in.translate.goog/mamallapuram-mahishasuramardini-mandapa/?_x_tr_sl=en&_x_tr_tl=ta&_x_tr_hl=ta&_x_tr_pto=tc
- https://academic.oup.com/jaac/advance-article-abstract/doi/10.1093/jaac/kpac064/6986162?redirectedFrom=fulltext
- https://www.researchgate.net/publication/288252312_Aesthetics/link/572681b608ae262228b2112a/download